INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

தகவல்களை இணையத் தளங்களில் ஆராய்தல்

# மொபைல் சாதனத்தில் (Android) தகவல்களைக் சேமித்தல், மீட்டெடுத்தல் மற்றும் நீக்குதல்




இதற்கான ஆதரவு:
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

# உள்ளடக்கம்


முகப்புரை 2

சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் 3

ஸ்கிரீன்ஷாட் எடுத்தல் 4

புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை மீட்டெடுத்தல் 5

புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை நீக்குதல் 6

இணையத்தளத்தைப் புக்மார்க் இடுதல் 7

புக்மார்க்கை மீட்டெடுத்தல் 8

புக்மார்க்கை நீக்குதல் 9

ஆவணத்தைச் சேமித்தல் 10

ஆவணத்தை மீட்டெடுத்தல் 12

ஆவணத்தை நீக்குதல் 13




# முகப்புரை

வாழ்க்கைக்கான மின்னிலக்கத் திறன்கள் (டி.எஸ்.எல்) கையேடு என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கிய சிறு புத்தகங்களின் தொகுதியாகும்:

- படிப்படியான வழிமுறைகள் மற்றும்
- விரைவான உதவிக் குறிப்புகள்

இணையத்தில் நம்பிக்கையுடனும் பாதுகாப்பாகவும் நீங்கள் உலாவுவதற்கு உதவுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மின்னிலக்கத் திறன்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருக்கிற, ஏதேனும் மின்னிலக்க அனுபவம் உள்ள அல்லது அனுபவம் இல்லாத அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

வரைபடத்தில் காட்டியுள்ளபடி, இன்றியமையாத திறன்கள் 5 திறமை பிரிவுகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

**தகவல்களை இணையவழித் தளங்களில் ஆராய்தல் திறன் மூலம் பெறும் கற்றல் பயன்கள்:**

கற்கும் நபரால் மொபைல் சாதனத்தில் தகவல்களைச் சேமிக்கவும், மீட்டெடுக்கவும், நீக்கவும் இயலும்.

DSL




**இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருத்தல்**

இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பாக இருங்கள்; தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; இணையத்தில் நேர்மறையாக இருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.


**தகவல்களை இணையவழித் தளங்களில் ஆராய்தல்**

இணையத்தில் தகவல்களைத் தேடவும், பார்க்கவும் மற்றும் மீட்டெடுக்கவும்.



**இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்**

இணையத்தில் மற்றவர்களுடன் இணையவும்.



**இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்**

இணையத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும்.




**அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்**

உங்கள் மொபைல் சாதனத்தின் அடிப்படை வன்பொருள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகளை அமைத்து இயக்கவும்.



இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளில் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்

உங்கள் மொபைல் சாதனத்தில் தகவல்களைச் சேமிக்கும்போது, மீட்டெடுக்கும்போது மற்றும் நீக்கும்போது பாதுகாப்பாக இருக்க, பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்கவும்:




உங்கள் தனிப்பட்ட தகவலுக்கான அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்க, கடவுக்குறியீடு, முக ஐடி அல்லது வடிவங்கள் (Android சாதனங்களுக்கு மட்டுமே பொருந்தும்) மூலம் **உங்கள் மொபைல் சாதனத்தைப் பூட்டிப் பாதுகாக்கவும்.**




அறியப்பட்ட பாதுகாப்புப் பாதிப்புகளில் இருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, புதுப்பிப்புகளைச் சரிபார்த்து, **உங்கள் செயலியை உடனடியாகப் புதுப்பிக்கவும்**.




**அதிகாரப்பூர்வ** ஆதாரங்களில் இருந்து செயலிகளைப் பதிவிறக்கவும்.


# ஸ்கிரீன்ஷாட் எடுத்தல்

புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட் எடுப்பது உங்கள் மொபைல் சாதனத்தில் தகவல்களைச் சேமிப்பதற்கான முறைகளில் ஒன்றாகும். பின்வரும் படிகள் உங்கள் மொபைல் சாதனத்தில் புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை சேமிக்கவும், மீட்டெடுக்கவும், நீக்கவும் உங்களுக்கு வழிகாட்டும்.




ஸ்கிரீன்ஷாட்டை எடுக்க **"ஒலியளவைக் குறைக்கும் பட்டன்"** மற்றும் **"இயக்க பட்டன்"** இரண்டையும் ஒரே நேரத்தில்

**அல்லது**



ஸ்கிரீன்ஷாட்டை எடுக்க, உள்ளங்கையில் இடமிருந்து வலமாக


# புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை மீட்டெடுத்தல்

**1** **கேலரி என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**




**"கேலரி"** என்ற சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

**2** **கேலரிக் தொகுப்புக் காட்சியைத் தேர்ந்தெடுக்கவும்**




நீங்கள் பார்க்க விரும்பும் புகைப்படம்/காணொளி/ஸ்கிரீன்ஷாட்டைத் தட்டவும்.

**3** **புகைப்படம்/காணொளியைத் தேர்ந்தெடுக்கவும்**




நீங்கள் பார்க்க விரும்பும் புகைப்படம் அல்லது காணொளி சிறுபடத்தைத் தட்டவும்.


# புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை நீக்குதல்

**1** **கேலரி என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**




**"கேலரி"** என்ற சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

**2** **புகைப்படம்/காணொளி/ ஸ்கிரீன்ஷாட்டைத் தேர்ந்தெடுக்கவும்**




நீங்கள் நீக்க விரும்பும் புகைப்படம்/காணொளி/ ஸ்கிரீன்ஷாட்டைத் தட்டவும்.

**3** **புகைப்படம்/ காணொளி /ஸ்கிரீன்ஷாட்டை நீக்கவும்**



நீக்குவதற்கு, **"குப்பைத் தொட்டி"** சின்னத்தைத் தட்டவும். பல கோப்புகளை நீக்க, நீங்கள் நீக்க விரும்பும் கோப்புகளை அழுத்திப் பிடித்துத் தேர்ந்தெடுக்கவும்.


# இணையத்தளத்தைப் புக்மார்க் இடுதல்

இணையத்தில் உலாவும்போது நீங்கள் மீண்டும் பார்க்க விரும்பும் இணையத்தளத்தை நீங்கள் கண்டால், அதை புக்மார்க் செய்யலாம். பின்வரும் படிகள் இணையத்தளத்தைப் புக்மார்க் செய்யவும், புக்மார்க்கை மீட்டெடுக்கவும், உங்களுக்கு இனி தேவையில்லாத பட்சத்தில் அதை நீக்கவும் உங்களுக்கு வழிகாட்டும்.

### 1 Google Chrome என்பதைத் தேர்ந்தெடுக்கவும்


**"Google Chrome உலாவி"** சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

### 2 3 புள்ளிகள் மெனு மீது தட்டவும்




நீங்கள் விரும்பும் இணையத்தளத்திற்குச் சென்று, 3 புள்ளிகள் மெனுவைத் தட்டவும்.

### 3 இணையத்தளத்தைப் புக்மார்க் இடவும்




இணையத்தளத்தைப் புக்மார்க் இடுவதற்கு நட்சத்திரம் மீது தட்டவும்.


# புக்மார்க்கை மீட்டெடுத்தல்




**1** Google Chrome என்பதைத் தேர்ந்தெடுக்கவும்

"Google Chrome உலாவி" சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.


**2** 3 புள்ளிகள் மெனு மீது தட்டவும்




**3** புக்மார்க்குகள் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்




**4** இணையத்தளத்தைத் தேர்ந்தெடுக்கவும்





நீங்கள் மீட்டெடுக்க விரும்பும் இணையத்தளத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

# புக்மார்க்கை நீக்குதல்


**1** **Google Chrome என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**

**"Google Chrome உலாவி"** சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

**2** **3 புள்ளிகள் மெனு மீது தட்டவும்**





**3** **புக்மார்க்கிடப்பட்ட இணையத்தளத்தைத் தேர்ந்தெடுக்கவும்**




நீங்கள் நீக்க விரும்பும் புக்மார்க்கு அடுத்துள்ள 3-புள்ளிகள் மெனுவைத் தட்டவும்.

**4** **புக்மார்க்கை நீக்கவும்**





**"நீக்கு"** என்பதைத் தட்டவும்.


# ஆவணத்தைச் சேமித்தல்

மின்னஞ்சல்கள் அல்லது உடனடிச் செய்திகள் மூலம் ஆவணங்களை இணைப்புகளாகப் பெறும்போது, அவற்றைக் கண்டறிய உங்கள் மின்னஞ்சல்கள் அல்லது உடனடிச் செய்திகள் மூலம் தேட வேண்டிய அவசியமின்றி அவற்றை எளிதாக மீட்டெடுப்பதற்காக உங்கள் மொபைல் சாதனத்தில் சேமிக்கலாம். உங்கள் மொபைல் சாதனத்தில் ஆவணத்தைச் சேமிக்க, மீட்டெடுக்க மற்றும் நீக்க பின்வரும் படிகள் உங்களுக்கு வழிகாட்டும்.

## 1 ஆவணத்தைத் திறக்கவும்




## 2 ஆவணத்தைத் திறக்க செயலியைத் தேர்வு செய்யவும்





நீங்கள் ஆவணத்தைத் திறக்க விரும்பும் செயலியைத் தேர்ந்தெடுக்கவும்.

## 3 கோப்பைச் சேமிக்கவும்





**"கோப்பாகச் சேமி"** என்பதைத் தட்டவும்.

## 4 கோப்பு வகையைத் தேர்ந்தெடுக்கவும்




நீங்கள் **"PDF கோப்பு"** அல்லது **"படிமக் கோப்பு"** என்பதாகச் சேமிக்க விரும்பினால் அதைத் தேர்ந்தெடுக்கவும்.

## 5 கோப்புறையைத் தேர்ந்தெடுக்கவும்




நீங்கள் ஆவணத்தைச் சேமிக்க விரும்பும் கோப்புறையைத் தேர்ந்தெடுக்கவும்.

## 6 கோப்பை மறுபெயரிடவும்





கோப்பின் பெயரை மறுபெயரிடவும் (விரும்பினால்), பிறகு **"சேமி"** என்பதைத் தட்டவும்.

# ஆவணத்தை மீட்டெடுத்தல்

## 1 எனது கோப்புகள் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்


**"எனது கோப்புகள்"** சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

## 2 பிரிவைத் தேர்ந்தெடுக்கவும்




எ.கா. **“ஆவணங்கள்”**.

## 3 ஆவணத்தைத் தேர்ந்தெடுக்கவும்




நீங்கள் மீட்டெடுக்க விரும்பும் கோப்பின் மீது தட்டவும்.


# ஆவணத்தை நீக்குதல்

**1** **எனது கோப்புகள் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**




**"எனது கோப்புகள்"** சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

**2** **கோப்பைத் தேடவும்**




கோப்பை நீக்குவதற்கு, அதைத் தட்டிப் பிடிக்கவும்.

**3** **நீக்க விரும்பும் கோப்புகளைத் தேர்ந்தெடுக்கவும்**




ரேடியோ பட்டன்(கள்) மீது தட்டுவதன் மூலம் நீங்கள் நீக்க விரும்பும் கோப்பை(களை) தேர்ந்தெடுத்து, **"நீக்கவும்"** எனும் குப்பைத் தொட்டி சின்னத்தைத் தட்டவும்.

# குறிப்புகள்

**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**மின்னஞ்சல்:** info@imda.gov.sg
**இணையத்தளம்:** digitalforlife.gov.sg

© 2024 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.